## (உ) வங்கித்தொழிலும் கொடுகடனும்

### மகாவங்கி

1961-ம் ஆண்டில் மகாவங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதியின் வீழ்ச்சி விகிதத்திற் தோன்றிய ஓர் சீர்த்திருத்தம் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட குறைவின் சுருக்கத்தைப் பிரதிபலித்தது. 1960ம் ஆண்டில் 1965 இலட்சம் ரூபாய்களால் அல்லது 50.8 சதவீததத்தால் சர்வதேச ஒதுக்குநிதியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு இவ்வீழ்ச்சி 39 இலட்சம் ரூபாய்களாக அல்லது 2 சதவீதமாய் இருந்தது. 1960ம் ஆண்டு மார்கழியில் மொத்த சர்வதேச ஒதுக்குநிதியின் அளவு 1902 இலட்சம் ரூபாய்களாகும். 1960 வைகாசியளவில் சர்வதேச ஒதுக்குநிதி 2688 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ச்சியடைந்தது. அதன்பின்னர் அது ஏறக்குறைய உறுதியாக வீழ்ந்துக்கொண்டே சென்று, 1961 மார்கழி முடிவில் 1847 இலட்சம் ரூபாய்களாயிற்று. அநுகூலமான வர்த்தக நிலுவையின் பயனுகவும் சர்வதேச நாணய நிதியிலிருந்து கொள்வனவு செய்த 538 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அந்நிய செலவாணியின் பயனுகவும், மாசியிலும், பங்குனியிலும் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமையின் விளைவாகவே, 1961 சித்திரையில் மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதி தீவிரமாக உயர்ந்தது. 1960ல் 2959 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய சர்வதேச ஒதுக்குநிதியின் சராசரி மட்டம், 1961ல் 2055 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. மகாவங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போயின. இது குறிப்பாக வரவு செலவு திட்டக் குறைக்கு நிதியீட்டுவதற்காக அரசாங்கத்திற்கு வழங்கிய கொடுகடன் காரணமாகவே நிகழ்ந்தது. 1960ம் ஆண்டில் மகாவங்கி அரசாங்கத்திற்கு வழங்கிய முற்பணங்கள் 219 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்திருக்க, 1961ம் ஆண்டில் இவை 201 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தன. அரசாங்கம் மகாவங்கியிடமிருந்து பெறக்கூடிய முற்பணங்களின் உச்சவரையறையை இத்தொகை அடைந்துவிட்டது. முற்பணங்கள் வடிவத்தில் மகாவங்கியிடமிருந்து அரசாங்கம் பெறக்கூடிய கடன், நடைமுறை நிதியாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 10 சதவீத தொகைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மகாவங்கியிடமிருந்த அரசாங்கப் பிணைகளும் அரசாங்க உத்தரவாதப்பிணைகளும் உறுதியாக உயர்ச்சியடைந்தன. 1960 மார்கழியில் 5687 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மகாவங்கியின் இந்த உடமைகள் 1961 கார்த்திகையில் 1095 இலட்சம் ரூபாய்களால், 6781 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது.

தை, மாசி மாதங்களைத் தவிர்ந்த 1961ம் ஆண்டு முழுவதும், வர்த்தக வங்கிகளின் ஒதுக்குநிதி நிலைமை, முந்தைய ஆண்டைப் போலவே தொடர்ந்தும் தாழ்வாகக் காணப்பட்டது. 1961ம் ஆண்டு ஆவணிக்குப் பின்னர் வர்த்தக வங்கிகளிடம் மேலதிகமான ஒதுக்கு நிதிகள் இல்லாதிருந்தன. காலத்திற்கு காலம் இவை மகாவங்கியின் உதவியை நாடவேண்டியிருந்தன. ஆண்டின் இரண்டாவது பகுதியில் மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள்பட்ட கடன்பாடு ஓர் உறுதியான மட்டத்திலேயே நின்றது.

கடத்த சில ஆண்டுகளில், பணநிரம்பலில் நாணயம், நாணயத்தாள்களின் பங்கு அதிகரித்திருந்தமை பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வதிகரிப்பு, முந்தைய ஆண்டிலும் பார்க்க 1961ம் ஆண்டில் மிகவும் குறிப்பிடும்படியாக விளங்கிற்று. 1960ம் ஆண்டு மொத்த நாணய வெளியீடு 6213 இலட்சம் ரூபாய்களிலிருந்து 6446 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. இது 233 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பாகும். 1961ம் ஆண்டு கார்த்திகையில் இது 6440 இலட்சம் ரூபாய்களிலிருந்து 7183 இலட்சம் ரூபாய்களுக்கு 737 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. நாணய வெளியீட்டில் மிகத்தீவிரமான அதிகரிப்பு சித்திரையில் ஏற்பட்டது. 1961ம் ஆண்டு தையில் 6310 இலட்சம் ரூபாய்களைக் கொண்டதாகவிருந்த நாணய வெளியீடு, அப்பொழுது 7492 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. அதன் பின்னர் நாணய வெளியீடு வீழ்ச்சியடைந்தது. 1961ம் ஆண்டின் கடைசிக் காற்பகுதியில் மீண்டும் உறுதியாக, கார்த்திகையில் இருந்த மட்டத்திற்கு உயர்ந்தது. வர்த்தக வங்கி நிர்வாகிகள் சங்கத்திற்கும் வங்கி ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குகளின் விளைவாக வழக்கமான வங்கிச் சேவைகள் நிலைக்குலைந்தமையால் ஒரு தற்காலிகமான அதிகரிப்பாக, சித்திரை மாதம் நாணய வெளியீட்டில் அதிகரிப்பு உண்டாயிற்று.

1960ம் ஆண்டு மார்கழியில் 1403 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய, வர்த்தக வங்கிகள் மகாவங்கியில் வைத்த வைப்புக்கள், 1961ம் ஆண்டு கார்த்திகையில் 1028 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. 1961ம் ஆண்டு சித்திரையிலும் புரட்டாதியிலும் ஏற்பட்ட சிறியதோர் ஏற்றத்தைத் தவிர, ஆண்டு முழுவதும் இவ்வைப்புக்கள் உறுதியாக வீழ்ச்சியடைந்தன. இவ்வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, வர்த்தக வங்கிகளின் திரவச்சொத்து நிலைமையில் உண்டாகிய இறுக்கத்தையும் பிரதிபலிக்கின்றது. 1961ம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி தொடக்கம் முன்பிருந்ததிலும் பார்க்கக் கூடுதலான ஒதுக்கப் பணங்களை வர்த்தக வங்கிகள் வைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்ற மகாவங்கியின் விதியின் விளைவாகவே மேற்கூறிய திரவச்சொத்து நிலைமையில் ஏற்பட்ட இறுக்கம் பெரும்பாலும் தோன்றியது. சர்வதேச தாபனங்களின் வைப்புக்களும், ஏனைய பொறுப்புக்களும், முறையே 695 இலட்சம் ரூபாய்களாலும், 136 இலட்சம் ரூபாய்களாலும் உயர்ந்தன. மொத்த நாணய வெளியீட்டிலும் ஏனைய கேள்விப் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு, சர்வதேச ஒதுக்குநிதியில் உண்டான வீழ்ச்சி, முதலியவை காரணமாக, பணத்தொகை கேள்விப்பொறுப்புக்கள் முதலியவற்றின் மொத்தத் தொகையில் சர்வதேச ஒதுக்குநிதியின் விகிதம் வீழ்ச்சியுற்றது. 1960ம் ஆண்டு மார்கழியில் 22.2 சதவீதமாக விளங்கிய இவ்விகிதம், 1961ம் ஆண்டு கார்த்திகையில் 19.5 சதவீதமாகியது. இந்த விகிதம்தான் பணத்தொகை, கேள்விப்பொறுப்புக்களின் மொத்தத் தொகையில் சர்வதேச ஒதுக்குநிதியின் விகிதத்தில் எக்காலத்திற் காணப்பட்டதிலும் பார்க்க மிகத்தாழ்வானது ஆகும்.

### கொடுகடன் கொள்கை

1960ம் ஆண்டு அறிக்கை, இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மிக விரைவான வீழ்ச்சியைத் தடுப்பதை பிரதான நோக்கமாகக்கொண்டு அவ்வாண்டில் மகாவங்கி மேற்கொண்ட பல நடவடிக்கைகளை எடுத்துக்கூறியது. சில குறித்த போகப்பொருட்கள், ஓரளவு போகப்பொருட்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும், இறக்குமதி செய்வதற்காகவும் வழங்கப்படும் கொடுகடன் பேரில் உள்ள வட்டி போன்ற கட்டணங்களை அதிகரிக்கச் செய்வதையும், கொடுகடனின் அளவை மட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளுக்கு மேலும் பக்கபலமாக, முற்பணங்களின் பேரில் உள்ள மகாவங்கியின் வட்டிவீதம் 2½ சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. ஆயினும் இன்றியமையாத வர்த்தக உற்பத்தித் தேவைகளுக்காக வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடன் பேரில் உள்ள வட்டிபோன்ற கட்டணங்களை இந்த வங்கி வட்டிவீத உயர்ச்சி அதிகரிக்கச்செய்யாவண்ணம், சில கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்டவகையில் வழங்கு தவணை வாக்குறுதிப் பத்திரங்களின் அடமானத்தின்பேரில் மகாவங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் கடன்மேல் உள்ள வட்டி விகிதம் 2½ சதவீதமாக நிலைநாட்டப்பட்டது. 1961ம் ஆண்டு தைமாதம் 26ம் திகதியில் இத்தகைய கொடுக்கல் வாங்கல்களுக்காக வழங்குதவணை வாக்குறிதிப்பத்திரங்களின் அடைமானத்தின் பேரில் மகாவங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய முற்பணங்களுக்கான விசேட வட்டிவீதம் 2½ சதவீதத்திலிருந்து 4 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. சிலவகைக் கொடுக்கல் வாங்கல்களுக்காக விசேட வட்டிவீதத்தில் வழங்கப்பட்ட கடன், வேறொருவகைக் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட வழியுண்டு என்ற காரணத்திற்காக, இன்றியமையாத கொடுக்கல் வாங்கல்களுக்காகத் தாழ்ந்த வட்டிவீதத்தையும், அத்தியாவசியமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்கு உயர்ந்த வட்டிவீதத்தையும் விதிப்பதில் அநுகூலங்கள் ஒன்றுமில்லையென மகாவங்கி உணர்ந்தது. ஆகவே அரசாங்கப்பிணைகளின் அடைமானத்தின் பேரில் வர்த்தக வங்கிகள் மகாவங்கியிடமிருந்து பெறும் கடன்மேல் உள்ள வட்டிவீதத்தை ஒன்றுபடுத்தி, மட்டமாக 4 சதவீதமாகத் தீர்மானிக்கப்பட்டது. அதே சமயத்தில், 1960ம் ஆண்டு வங்கி வட்டிவீத உயர்ச்சியுடன் சில குறித்த தேவைகளுக்காக வர்த்தக வங்கிகள் வழங்கும் முற்பணங்களின் பேரில் புகுத்தப்பட்ட மேல்மட்ட வட்டிவீதமான 6 சதவீதம் அதே திகதியில் நீக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் திரவச்சொத்து நிலையில் குறிப்பாக 1960ம் ஆண்டு கடைசி நான்கு மாதங்களிலும் 1961ம் ஆண்டு தையிலும், மாசியிலும் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக, வர்த்தக வங்கிகளின் மேலதிக ஒதுக்குநிதிகளின் ஒரு பெரும் பகுதியைத் திரட்டிக்கொள்வதற்காக மகாவங்கி சில நடவடிக்கைகளைப் புகுத்தியது. 1961ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி தொடக்கம், 1961ம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதியில் இருந்த பொறுப்புக்களின் மட்டத்திற்கு மேலாக தத்தம் கேள்வி வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் 38 சதவீதத்திற்குச் சமமாகிய விசேட ஒதுக்குநிதிகளை வர்த்தக வங்கிகள் வைத் திருத்தல் வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டன. தவணைவைப்புக்கள் சேமிப்பு வைப்புக்களுக்கு எதிராக விசேட ஒதுக்குநிதிகள் வைத்திருக்கவேண்டுமென விதிக்கப்படவில்லை. தற்பொழுது அவற்றிற்கு எதிராக நிலவும் ஒதுக்குநிதி வீதமாகிய 5 சதவீதம், மாற்றமின்றி இருந்தது.

உயர்ந்த ஒதுக்குநிதி நிபந்தனைகளின் விளைவாக வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்து நிலைமையில் உண்டான நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, ஆடி முதல் வங்கிகள் தாம் வைத்திருக்கவேண்டிய ஒதுக்குநிதிகளை, மகாவங்கியில் ரூபா வைப்புக்கள் ரூபத்திலும், நாணயத்தாள்கள், நாணயங்கள் முதலியனவற்றிலும் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டன. இவை தாம் வைத்திருக்கவேண்டிய ஒதுக்கு நிதிகளில் நாணயத்தாள்கள், நாணயங்கள் ரூபத்தில் வைத்திருக்கக்கூடிய அளவு 50 சதவீதத்திற்கு (புரட்டாதியில் இது 75 சதவீதத்திற்கு உயர்த்தப் பட்டது) மேற்படக்கூடாது. மீதி 50 சதவீதமும் மகாவங்கியில் ரூபா வைப் புக்கள் ரூபத்திலே வைத்திருக்கப்படல்வேண்டும். 1961ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதியுடன் முடிந்த வங்கித்தொழில் வரைக்கும் இருந்த வர்த்தக வங்கி களின் நாணயத்தாள், நாணயங்கள் உடைமைகளுக்கும் மேலதாக இவ்வுடமைக ளில் பின்னர் ஏற்பட்ட அதிகரிப்பை மட்டும் "நாணயத்தாள், நாணயங்கள்" என்ற சொற்றொடர் குறிக்கும்.

### வர்த்தக வங்கிகள்

1961ம் ஆண்டு ஆடி மாதம் 1ம் திகதி நிறுவப்பட்ட மக்கள் வங்கி பின் வரும் நகரங்களிற் கிளைகளைத் திறந்தது:- பொலன்னறுவை, இங்குரக்கொடை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், புத்தளம், மாத்தளை, கண்டி; இதனால் கொழும்புக்கு வெளியே உள்ள அதன் அலுவலகங்கள் ஏழுக்கு அதிகரித்தன. இதன் புதிய கிளைகளில் நான்கு, முன்னர் வங்கி வசதிகள் கிடைக்காத இடங் களில் ஸ்தாபிக்கப்பட்டன. இலங்கை வங்கி கொழும்பில் ஒரேயொரு புதிய கிளையைத் திறந்தது. இதன் பயனாக அதன் அலுவலகங்கள் 27க்கு அதிகரித் தன. 1961ம் ஆண்டு முடிவில் வங்கி அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 54 ஆக விளங்கின. இதில் 20 கொழும்பில் அமைந்திருந்தது. ஆண்டு முடிவிற் காணப்பட்ட, உள்நாட்டு வங்கிகளுக்கும் அந்நிய வங்கிகளுக்கும் இடையே உள்ள வங்கி அலுவலகங்களின் பங்கீட்டையும், வைப்புக்களின் பங்கீட்டையும் பின்வ ரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II—33

வங்கி அலுவலகங்கள், வைப்புக்கள் முதலியவற்றின் பங்கீடு

| மொத்தம் | | | இலங்கை வங்கிகள் | | | பிரித்தானிய வங்கிகள் | | | இந்திய வங்கிகளும் ஏனைய வங்கிகளும் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அலுவலங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள்: பத்து இலட்சம் ரூபாகளில் தொகை | வைப்புக்கள்: % | அலுவலங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள்: பத்து இலட்சம் ரூபாகளில் தொகை | வைப்புக்கள்: % | அலுவலங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள்: பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | வைப்புக்கள்: % | அலுவலங்களின் எண்ணிக்கை | வைப்புக்கள்: பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை | வைப்புக்கள்: % |
| 54 | 1,041 | 100 | 37 | 503 | 48 | 12 | 467 | 45 | 5 | 71 | 7 |

மூலம்: இலங்கை மகா வங்கி

வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற் றின் பங்கீடு பின்னிணைப்பு IIல் உள்ள 4ம் அட்டவணையில் விரிவாக எடுத்துக்காட் டப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் அவற்றின் பங்கீடு சுருக்கித்தரப்பட் டுள்ளது.

### அட்டவணை—II—34
### வர்த்தக வங்கிகளின் இருப்புச் சொத்துக்கள், பொறுப்புக்கள் முதலியவற்றின் பங்கீடுகள்
**(மாத எண்தொகைகளின் சராசரி)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 | 1960 | 1961* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள பணமும் (நியதிச்சட்ட முறையான ஒதுக்குப்பணமும் உட்பட) மகாவங்கியில் வைக்கப் பட்ட வைப்புக்களும் .. | 177 | 128 | 106 | 149 | 148 | 139 | 119 | 116 | 132 | 149 |
| அந்நிய நிலுவைகள் .. | 97 | 44 | 55 | 112 | 116 | 72 | 50 | 52 | 58 | 54 |
| இறைசேரி உண்டியல்கள் .. | 39 | 55 | 60 | 51 | 39 | 34 | 16 | 24 | 28 | 50 |
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் .. | 64 | 65 | 73 | 94 | 93 | 100 | 116 | 119 | 115 | 122 |
| **மொத்த திரவச் சொத்துக்கள்** .. | **377** | **292** | **294** | **406** | **396** | **345** | **301** | **311** | **333** | **375** |
| **மொத்த முதலீடுகள்(1)** .. | **235** | **235** | **221** | **245** | **291** | **308** | **296** | **285** | **284** | **289** |
| **மொத்தக் கடன்களும் மேலதி கப் பற்றுக்களும்** .. | **176** | **182** | **208** | **244** | **273** | **340** | **363** | **395** | **430** | **435** |
| கேள்விவைப்புக்கள்(2) .. | 653 | 573 | 562 | 675 | 731 | 721 | 661 | 655 | 657 | 678 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் .. | 95 | 102 | 126 | 190 | 206 | 240 | 263 | 300 | 340 | 358 |
| **மொத்த வைப்புக்கள்** .. | **754** | **677** | **689** | **869** | **941** | **965** | **926** | **955** | **998** | **1,038** |
| சதவீதம்:— | % | % | % | % | % | % | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்கு கையிருப்பிலுள்ள பணத்தின் விகிதம் .. | 27·1 | 22·3 | 18·9 | 22·1 | 20·2 | 19·3 | 18·0 | 17·7 | 20·1 | 22·0 |
| மொத்த வைப்புக்களுக்கு கையிருப்பிலுள்ள பணத் தின் விகிதம் .. | 23·5 | 18·9 | 15·4 | 17·1 | 15·7 | 14·4 | 12·9 | 12·1 | 13·2 | 14·4 |
| மொத்த வைப்புக்களுக்கு அந்நிய நிலுவைகளின் விகிதம் .. | 12·9 | 6·5 | 8·0 | 12·9 | 12·3 | 7·5 | 5·4 | 5·4 | 5·8 | 5·2 |
| மொத்த வைப்புக்களுக்கு இறைசேரி உண்டியல் களின் விகிதம் .. | 5·2 | 8·1 | 8·7 | 5·9 | 4·1 | 3·5 | 1·7 | 2·5 | 2·8 | 4·8 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவோடு மாற்றப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் .. | 8·5 | 9·6 | 10·6 | 10·8 | 9·9 | 10·4 | 12·5 | 12·5 | 11·5 | 11·8 |
| கேள்வி வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் .. | 57·7 | 50·9 | 52·3 | 60·1 | 54·2 | 47·9 | 45·5 | 47·5 | 50·7 | 55·3 |
| மொத்த வைப்புக்களுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் .. | 50·0 | 43·1 | 42·7 | 46·7 | 42·1 | 35·8 | 32·5 | 32·6 | 33·4 | 36·1 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீடுகளின் விகிதம் .. | 31·2 | 34·7 | 32·1 | 28·2 | 30·9 | 31·9 | 32·0 | 29·8 | 28·5 | 27·8 |
| மொத்த வைப்புக்களுக்கு கடன்கள், மேலதிகப் பற் றுக்களின் விகிதம் .. | 23·3 | 26·9 | 30·2 | 28·1 | 29·0 | 35·2 | 39·2 | 41·4 | 43·1 | 41·9 |

* மாதம்: தை/கார்த்திகை. மூலம்: இலங்கை மகா வங்கி

(1) அரசாங்கப் பிணைகளும், அரசாங்க உத்தரவாதப் பிணைகளும், மகாவங்கி வெளியீடுகளும்.

(2) உள்நாட்டு வங்கிகள் இடையே உள்ள வைப்புக்களை உள்ளடக்கா.

1960ம் ஆண்டு 9931 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 10571 இலட்சம் ரூபாய்களுக்கு 640 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்த வர்த்தக வங்கிகளினது மொத்த வைப்புக்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம் வரை இவ்வைப்புக்கள் 10571 இலட்சம் ரூபாய்களிலிருந்து 10412 இலட்சம் ரூபாய்களுக்கு 159 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. ஆயினும், 1961ம் ஆண்டின் முதற் பதினொரு மாதங்களில், மொத்தவைப்புப் பொறுப்புக்களின் மாதச்சராசரி 1960ம் ஆண்டிலும் பார்க்க உயர்ந்ததாக விளங்கியது. இது 1960ல் 9975 இலட்சம் ரூபாய்களாகவும், 1961ல் 10376 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிற்று. கேள்விவைப்புக்கள், தவணை சேமிப்பு வைப்புக்கள் ஆகிய இரண்டிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 1961, கார்த்திகையில் கேள்வி வைப்புக்கள்

6849 இலட்சம் ரூபாய்களிலிருந்து 6810 இலட்சம் ரூபாய்களுக்கும், தவணை-சேமிப்பு வைப்புக்கள் ஆகியன 3722 இலட்சம் ரூபாய்களிலிருந்து 3602 இலட்சம் ரூபாய்களுக்கும் வீழ்ச்சியுற்றன. விகிதாச்சார முறைப்படி பார்க்கையில், தவணை, சேமிப்புவைப்புக்கள் ஆசியனவற்றில் ஏற்பட்ட (3.2 சதவீத) வீழ்ச்சி, கேள்வி வைப்புக்களில் ஏற்பட்ட (0.6 சதவீத) வீழ்ச்சியிலும் கூடியதாகும். 1961ம் ஆண்டு ஐப்பசியில், அதிகமான வங்கிகள் சேமிப்புவைப்புக்களின் பேரில் கொடுக்கப்படும் தத்தம் மேல்மட்ட வட்டி விகிதங்களை 2½ சதவிகிதத்திற்கு உயர்த்தின. 1961ம் ஆண்டு புரட்டாதி மாத பிற்பகுதி தொடக்கம் சில வங்கிகள், 25,000 ரூபாய்கள் அல்லது மேற்பட்ட தொகைகள் கொண்ட நிலையான வைப்புக்களின் பேரிற் கொடுக்கப்படும் தத்தம் வட்டி விகிதங்களையும் 3 சதவிகிதத்திற்கு உயர்த்தின. 1961ம் ஆண்டு புரட்டாதியிலும், கார்த்திகையிலும் தவணை வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு உயர்ந்த வட்டி விகிதங்களே பெரும்பாலும் காரணமாக விளங்கியிருக்கக்கூடும்.

1960ம் ஆண்டு புரட்டாதி மாத முடிவிலும், 1961ம் ஆண்டு பங்குனி புரட்டாதி ஆகிய மாதங்களின் முடிவிலும் வங்கிகளிற் கட்டிய வைப்புக்களின் உடமையாளர்களை (அரசாங்க வைப்புக்களையும், வங்கிகள் இடையே ஏற்பட்டனவற்றையும் தவிர்த்து) பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. இவை மகாவங்கியின் அரையாண்டு அளவைகளை அடிப்படையாக கொண்டவையாகும்.

அட்டவணை—II—35

வைப்புக்களின் உடமையாளர்கள்

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில் தொகை

| உடமையாளர்கள் | கேள்வி | | தவணை | | சேமிப்பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நிதி நிலையங்கள்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 48·7 | 8·3 | 51·3 | 24·2 | 5·3 | 4·2 | 105·2 | 11·4 |
| 1961 பங்குனி .. | 51·2 | 8·9 | 56·5 | 25·0 | 3·1 | 2·5 | 110·8 | 12·0 |
| 1961 புரட்டாதி .. | 46·5 | 7·8 | 55·0 | 26·6 | 3·7 | 2·9 | 105·2 | 11·3 |
| **தோட்டங்கள்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 129·3 | 22·0 | 52·4 | 24·7 | 1·4 | 1·1 | 183·1 | 19·8 |
| 1961 பங்குனி .. | 125·9 | 21·9 | 57·8 | 25·5 | 0·9 | 0·7 | 184·7 | 19·9 |
| 1961 புரட்டாதி .. | 101·4 | 17·1 | 44·4 | 21·4 | 0·1 | ... | 146·0 | 15·7 |
| **வர்த்தகம்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 73·3 | 12·5 | 12·2 | 5·7 | 0·5 | 0·4 | 86·1 | 9·3 |
| 1961 பங்குனி .. | 73·3 | 12·8 | 12·5 | 5·5 | 0·4 | 0·3 | 86·2 | 9·3 |
| 1961 புரட்டாதி .. | 91·2 | 15·4 | 13·3 | 6·4 | 1·1 | 0·9 | 105·6 | 11·4 |
| **ஏனைய வியாபாரம்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 50·7 | 8·6 | 38·7 | 18·2 | 1·2 | 1·0 | 90·6 | 9·8 |
| 1961 பங்குனி .. | 55·2 | 9·6 | 18·1 | 8·0 | 1·2 | 1·0 | 74·4 | 8·0 |
| 1961 புரட்டாதி .. | 68·9 | 11·6 | 17·5 | 8·5 | 1·8 | 1·4 | 88·1 | 9·5 |
| **உள்ளூர் ஆட்சிச்சபைகள்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 16·9 | 2·9 | 6·1 | 2·9 | 0·2 | 0·2 | 23·2 | 2·5 |
| 1961 பங்குனி .. | 16·9 | 2.9 | 27·0 | 11·9 | 0·2 | 0·2 | 44·1 | 4·8 |
| 1961 புரட்டாதி .. | 21·0 | 3·5 | 19·0 | 9·2 | 0·2 | 0·2 | 40·2 | 4·3 |
| **வியாபார சம்பந்தமல்லாத நிலையங்கள்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 26·8 | 4·6 | 8·0 | 3·8 | 2·7 | 2·2 | 37·6 | 4·1 |
| 1961 பங்குனி .. | 30·5 | 5·3 | 5·8 | 2·6 | 2·3 | 1·8 | 38·6 | 4·2 |
| 1961 புரட்டாதி .. | 33·8 | 5·7 | 7·3 | 3·5 | 2·3 | 1·8 | 43·4 | 4·7 |
| **தனியாட்கள்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 241·7 | 41·1 | 43·7 | 20·6 | 113·8 | 91·0 | 399·1 | 43·1 |
| 1961 பங்குனி .. | 221·4 | 38·5 | 48·9 | 21·6 | 116·9 | 93·4 | 387·2 | 41·8 |
| 1961 புரட்டாதி .. | 230·0 | 38·8 | 50·5 | 24·4 | 118·2 | 92·9 | 398·6 | 43·0 |
| **மொத்தம்:** | | | | | | | | |
| 1960 புரட்டாதி .. | 587·4 | 100·0 | 212·4 | 100·0 | 125·0 | 100·0 | 924·9 | 100·0 |
| 1961 பங்குனி .. | 574·4 | 100·0 | 226·4 | 100·0 | 125·1 | 100·0 | 925·9 | 100·0 |
| 1961 புரட்டாதி .. | 592·8 | 100·0 | 207·0 | 100·0 | 127·3 | 100·0 | 927·2 | 100·0 |

மொத்த வைப்புக்கள், 1960ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் இருந்த ரூபா 9249 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு பங்குனி மாதம் ரூபா 9259 இலட்சத்திற்கும் 1961ம் ஆண்டு புரட்டாதி மாதம் ரூபா 9272 இலட்சத்திற்கும் அதிகரித்தன. இவ் வைப்புக்களில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பான ரூபா 23 இலட்சமும் பெரும்பாலும் கேள்வி வைப்புக்களின் பேரிலும், சேமிப்பு வைப்புக்களின் பேரிலும் ஏற்பட்டவை யாகும். தவணை வைப்புக்கள் உண்மையில் வீழ்ச்சியடைந்தன. கேள்வி வைப்புக்க ளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் வர்த்தக நிலையங்களினதும் உள்ளூராட்சி நிலையங்களினதும் உடமைகளிலேயே ஆகும். தவணை வைப்புக்களில் உள்ளூராட்சி நிலையங்களுக்குச் சொந்தமானவை தீட்சணமாக அதிகரித்திருக்கையில், ''ஏனைய வர்த்தகம்'' என்ற தொகுதியின் உடமைகள் தீட்சணமாக வீழ்ச்சியடைந்தன. தனி ஆட்களின் சேமிப்பு வைப்புக்களல்லாத ஏனைய தொகுதிகளைச் சேர்ந்த சேமிப்பு வைப்புக்கள் வீழ்ச்சிப் போக்கைக் காட்டின. 1960ம் ஆண்டு ஆவணி மாதத்தில் மகா வங்கியாற் புகுத்தப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளின் பயனாகவும், இறக்குமதி களின் பேரில் அரசாங்கத்தினால் புகுத்தப்பட்ட அளவுக் கட்டுப்பாடுகளின் பயனாக வும் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களும், முற்பணங்களும், 1960ம் ஆண்டு ஆவணி மாதத்திலிருந்த ரூபா 5569 இலட்சத்திலிருந்து மார்கழி மாதத் தில் ரூபா 5439 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன. எனினும் 1961ம் ஆண்டு தை மாதத் தில் இவை ரூபா 5595 இலட்சத்திற்கு உயர்ந்தன. ஆனால் அவை மாசி மாதத்தில் கிட்டத்தட்ட ரூபா 100 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்த பின்னர் பங்குனியிலும், சித்திரையிலும் நிதானமாக உயர்ந்தன. ஆகக்கூடிய அதிகரிப்பு சித்திரை மாதம் தான் ஏற்பட்டது. பங்குனி மாதத்தில் 5609 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய கடன்களும், மேலதிகப் பற்றுக்களும் சித்திரை மாதத்தில் 5893 இலட்சம் ரூபாய்க ளுக்கு அதிகரித்தன. அதன்பின் ஓரளவு ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டன. 1961ம் ஆண்டு ஆவணி மாத முடிவில் ரூபா 5608 இலட்சமாக விளங்கிய கடன்களும், மேல திகப் பற்றுக்களும், 1960ம் ஆண்டு ஆவணி மாதத்திற்குரிய தொகையிலும் பார்க்கச் சிறிது உயர்ந்தது ஆகும். 1961ம் ஆண்டில் ரூபா 4346 இலட்சமாக விளங்கிய கடன் களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் மாதச் சராசரி மட்டம், 1960ம் ஆண்டிற்கு ரிய ரூபா 4297 இலட்சத்திலும் பார்க்கக் கூடியது ஆகும். 1960ம் ஆண்டு மார்கழி மாதத்திற்கும், 1961ம் ஆண்டு கார்த்திகை மாதத்திற்கும் இடையில் மேலதிகப் பற் றுக்கள் ரூபா 51 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்து ரூபா 2896 இலட்சமாக விளங் கின. 1960ம் ஆண்டில் ரூபா 1381 இலட்சமாக இருந்த கடன்கள் 100 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்து, 1961ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் ரூபா 1281 இலட்சமாக விளங்கின. ஏற்றுமதி உண்டியல்கள் 554 இலட்சம் ரூபாய்களிலிருந்து 651 இலட்சம் ரூபாய்களுக்கும், இறக்குமதி உண்டியல்கள் 533 இலட்சம் ரூபாய்களி லிருந்து 538 இலட்சம் ரூபாய்களுக்கும் உயர்ந்தன. பங்குனி மாதத்திலும், சித்திரை மாதத்திலும் கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட தீட்சண மான அதிகரிப்பு, வர்த்தக வங்கிகளுக்கும் அவற்றின் ஊழியர்களுக்குமிடையே உண்டான தொழிற் தகராறுகளின் பயனாய் வங்கிச் சேவைகள் நிலைகுலைந்தமை யினால் ஓரளவில் ஏற்பட்டது எனவும் சொல்லலாம். இத்தகராறுகள் இருந்த காலத்தில் வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகள் பெரும்பாலும் காசோலைகளை மாற்றுவதற்கு மட்டும் குறுக்கப்பட்டு இருந்தமையால் வங்கிகள், தம்மிடமிருந்து ஏற்கனவே மேலதிகப் பற்றுக்கள் பெற்ற வரவுகாரர்களுக்கு உள்ள கொடுகடன் வரையறைகளை மேலும் நீடித்து உதவவேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே கடன் கள், முற்பணங்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற் பெரும்பாலானவை மேலதிகப் பற்றுக்களின் பேரிலேயே ஏற்பட்டதாகும். மாசி மாதம் ரூபா 2998 இலட்சமாக இருந்த மேலதிகப் பற்றுகள், சித்திரை மாதத் தில் ரூபா 3217 இலட்சத்திற்கு அதிகரித்தன. கடன்கள், மேலதிகப் பற்றுகள் ஆகி யவை 1960ம் ஆண்டு மார்கழியில் இருந்த தொகையிலும் பார்க்க 1961ம் ஆண்டு தை மாதத்தில் அதிகரித்தமைக்கான காரணங்களாவன, வர்த்தக வங்கிகளின் மேலதிக ஒதுக்குநிதிகளும் திரவச் சொத்து நிலையும் சீரடைந்தமையோடு, பல வங்கிகள் தமது மேலதிகப் பற்றுக்களைக் கடன்களாக மாறியமை ஏனெனில், நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 82 (1) பிரிவின்கீழ் இவ்வகை வாக்குறுதிப் பத்தி ரங்களை அடமானமாகக் கொடுத்து மகாவங்கியிடமிருந்து சலுகை வீதமான $2\frac{1}{2}$ சத வீத வட்டிப்படி கடன்படுவதற்கு வசதிசெய்து கொள்வதற்காகவாகும். இவ்வசதி 1961ம் ஆண்டு மாசி மாதம் நீக்கப்பட்டபின் வர்த்தக வங்கிகள் இப்பழக்கத்தைக் கைவிட்டதோடு, கடன்கள் சிறிது குறைந்தன.

முந்தைய வருடத்தில் கையிருப்புப் பணம் 1959ம் ஆண்டு மார்கழி மாதத்திற்குரிய 435 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1960ம் ஆண்டு மார்கழி மாதம் 393 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைவுற்றிருக்கையில், 1961ம் ஆண்டில் இப்பணமீதங்கள் 82 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து 1961ம் ஆண்டு கார்த்திகையில் 475 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. மகாவங்கியிடம் இருந்த வைப்புக்கள் 1368 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு கார்த்திகையில் 1043 இலட்சம் ரூபாய்களுக்குத் தீட்சணமாகக் குறைந்தன. ரூபா 325 இலட்சம் கொண்ட இவ்வீழ்ச்சி, 1960ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 445 இலட்சம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. மகாவங்கியிடம் இருந்த வைப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஒருவகைக் காரணமாக, வங்கிகளின் மேலதிக ஒதுக்கு நிதிகளின் அளவில் ஏற்பட்ட குறையும், இன்னொரு வகைக் காரணமாக, கேள்வி, தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களின் அளவில் ஏற்பட்ட நிகர ஒடுக்கமுமே ஆகும். வங்கிகளின் உடமைகளான வெளியூர் நிலுவைகள் 563 இலட்சம் ரூபாய்களிலிருந்து 453 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தமை, 1960ம் ஆண்டில் ரூபா 509 இலட்சத்திலிருந்து ரூபா 563 இலட்சத்திற்கு அதிகரித்தமையோடு ஒப்பிடத்தக்கது. வர்த்தக வங்கிகளின் உடமையில் உள்ள இறைசேரி உண்டியல்கள் 1960ம் ஆண்டு மார்கழியில் இருந்த 479 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு கார்த்திகையில் 700 இலட்சம் ரூபாய்களுக்கு குறிப்பிடத்தக்க முறையில் அதிகரித்தது. இவ்வருடத்திற்குரிய உடமைகளின் சராசரி ரூபா 499 இலட்சமாகவும், 1960ம் ஆண்டுக்குரிய தொகை ரூபா 285 இலட்சமாகவும் விளங்கின. வர்த்தக வங்கிகளின் ஆவணங்களான அரசாங்கப் பிணைகள் 1960ம் ஆண்டு மார்கழியிலிருந்த 2875 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 1961ம் ஆண்டு கார்த்திகையில் 2925 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. முந்தைய வருடத்தில் வர்த்தக வங்கிகளின் உடமையிலிருந்த அரசாங்கப் பிணைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 40 இலட்சமாகும். கொள்வனவு செய்யப்பட்டதும், கழிவோடு மாற்றப்பட்டதுமான உண்டியல்களின் மாதச் சராசரி 1960ம் ஆண்டுக்குரிய ரூபா 1147 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 1219 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்விடயத்தின் தனித்தனிக் கூறுகளில், ஏற்றுமதி உண்டியல்கள் 1960ம் ஆண்டு மார்கழியில் இருந்த 554 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு கார்த்திகையில் 651 இலட்சம் ரூபாய்களுக்கும், இறக்குமதி உண்டியல்கள் 533 இலட்சம் ரூபாய்களிலிருந்து 538 இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகரித்தன.

1960ம் ஆண்டில் 3333 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்தத் திரவச் சொத்துக்களின் சராசரி, 1961ம் ஆண்டு கார்த்திகையில் முடிவுற்ற பதினொரு மாதங்களிலும் ரூபா 3750 இலட்சத்திற்கு அதிகரித்தது. திரவச் சொத்துக்களின் விகிதாச்சாரம் 1960ம் ஆண்டுக்குரிய கேள்வி வைப்புக்களின் 57.2 சதவீதத்திலிருந்து, 1961ம் ஆண்டு கார்த்திகையில் 57.6 சதவீதத்திற்கு உயர்ந்தது.

1960ம் ஆண்டு மார்கழி மாதத்தில் ரூபா 395 இலட்சங்களாக விளங்கிய மேலதிக ஒதுக்கு நிதிகள் 1961ம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களிலும் நிதானமாகக் குறைந்தன. ஆவணி மாதம் முதல் வங்கிகள் மேலதிக ஒதுக்குநிதிகளை வைத்திருக்கவில்லை. 1961ம் ஆண்டு தை மாதத்திலும், மாசி மாதத்திலும் வங்கிகள் கணிசமான அளவுடைய மேலதிக ஒதுக்கு நிதிகளை வைத்திருந்தன எனினும், 1961ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி முதல் விசேட ஒதுக்குநிதித் தேவைகள் சம்பந்தமான விதிமுறைகள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, இந்த மேலதிக ஒதுக்குநிதிகள் குறிப்பிடும்படியாகக் குறைந்தன. 1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் முதல் 1961ம் ஆண்டு மாசி மாதம் வரை வர்த்தக வங்கிகளின் மேலதிகமான ஒதுக்கு

நிதிகள் அதிகரித்தமை, பெரும்பாலும் 1960ம் ஆண்டிற் புகுத்தப்பட்ட நாணய கட்டுப்பாடு நடவடிக்கைகள் வர்த்தக வங்கிகளின் பொருள் வளங்களில் ஒரு பகுதியைச் செயலறச் செய்தமையின் பயனுல் ஏற்பட்டதாகும்.

1961ம் ஆண்டு பங்குனி மாதம் வரை பல வங்கிகள் தமது மேலதிகமான ஒதுக்கு நிதிகளைப் பாவிப்பதன் மூலமாகத் தமது அதிகரித்த கடன்களுக்கும், முற்பணங்களுக்கும் நிதியீட்டம் செய்யமுடிந்தது. எனினும் பங்குனி மாதத்திற்குப்பின் கொடுகடன் தேவைகளில் ஏற்பட்ட அதிகரிப்பைச் சமாளிப்பதற்காக அநேகமான வங்கிகள், மகாவங்கியிடமிருந்து கடன்படவேண்டி நேரிட்டது. இக்கடன்பாடுகள் இவ்வருடம் முழுவதும் பெரும் அளவினதாக விளங்கின. (ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் இப்போக்கிற்கு விதிவிலக்காகும்). வங்கிகளை முழுமையாக நோக்குமிடத்து மேலதிக ஒதுக்குநிதிகள் இருந்த காலமாகிய தை, மாசி மாதங்களிலும்கூட, தனித்தனியாக சில வங்கிகள் மகாவங்கியிடமிருந்து கடன்பட்டிருந்தன. மேலதிக ஒதுக்குநிதிகள் வெவ்வேறு வங்கிகளிடையே கூடியும் குறைந்தும் அமைந்து இருந்தமையால் இது பெரும்பாலும் ஏற்பட்டது. 1961ம் ஆண்டு தை மாதம் முதல் மகாவங்கி எவ்வளவு தூரம் வர்த்தக வங்கிகளுக்கு இணக்கமளித்தது என்பதைப் பின்வரும் எண்தொகைகள் காட்டுகின்றன.

அட்டவணை II—36

மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பட்ட கடன்கள்

1960—1961

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 |
|---|---|---|
| தை | — | 21·0 |
| மாசி | — | 20·0 |
| பங்குனி | 15·2 | 27·9 |
| சித்திரை | 14·8 | 16·0 |
| வைகாசி | 5·5 | 17·8 |
| ஆனி | — | 26·4 |
| ஆடி | 14·4 | 38·9 |
| ஆவணி | 19·3 | 21·0 |
| புரட்டாதி | 23·0 | 15·5 |
| ஐப்பசி | 22·0 | 1·0 |
| கார்த்திகை | 21·0 | 1·0 |
| மார்கழி | 21·0 | 20·6 |

மூலம்: இலங்கை மகா வங்கி

1961ம் ஆண்டு வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் முந்தைய ஆண்டு இருந்ததிலும் பார்க்க உயர்ந்ததாகும். வங்கிகளின் திரவச்சொத்து நிலை குறைந்தமையால் அநேகமான வங்கிகள் வாடிக்கையாகப் பணச்சந்தையிற் கடன்படவேண்டி நேரிட்டது. வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் 1961ம் ஆண்டு 404 இலட்சம் ரூபாய்களாக இருந்தமை 1960ம் ஆண்டிற்குரிய 369 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடத்தக்கது. 1961ம் ஆண்டில் வங்கிகளிடையேயுள்ள கடன்பாடுகள் நிதானமாக இருந்தன எனினும் அழைப்புக் கடன்களின்மேல் உள்ள வட்டிவிகிதம் மாறுபாடின்றி 2 சதவீதமாக விளங்கியது.

1961ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதி முடிவுற்ற ஓராண்டு காலத்தில் தனிப்பட்டோர் துறைக்கு வங்கிகள் வளங்கிய முற்பணங்களைப் பற்றிய பின்வரும் விளக்கம், அரைவருட அளவீட்டை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

வங்கிகள் வளங்கிய முற்பணங்கள், எந்தெந்தத் தேவைகளுக்காக, எவ்வளவு காலத்திற்கு முன் மீட்கப்படவேண்டும் என வழங்கப்பட்டது என்ற பாகுபாடுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது,

**அட்டவணை II—37**

தேவைகளின்படியும் மீள்தற் காலங்களின்படியும் பாகுபடுத்தப்பட்ட முற்பணங்கள்†

பத்து இலட்சம் ரூபாய்களில்

| தேவை | குறுகியகால (6 மாதத்திற்குள்) | | நடுத்தரகால (6 முதல் 30 மாதங்கள்வரை) | | நீண்டகால (30 மாதங்களுக்குமேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (1) | (1), (7)ன் சதவீதமாக (2) | தொகை (3) | (3), (7)ன் சதவீதமாக (4) | தொகை (5) | (5), (7)ன் சதவீதமாக (6) | தொகை (7) | (7), மொத்தத்தின் சதவீதமாக (8) |
| **(அ) வர்த்தகம்** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 194·4 | 50·5 | 154·4 | 40·1 | 36·2 | 9·4 | 385·1 | 68·7 |
| பங்குனி 1961 .. | 193·7 | 49·4 | 163·2 | 41·6 | 35·3 | 9·0 | 392·2 | 69·7 |
| புரட்டாதி 1961†† .. | 143·0 | 36·4 | 210·0 | 53·5 | 39·7 | 10·1 | 392·7 | 70·3 |
| **(ஆ) நிதி** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 24·1 | 23·7 | 51·8 | 51·0 | 25·6 | 25·2 | 101·6 | 18·1 |
| பங்குனி 1961 .. | 20·5 | 22·1 | 49·6 | 53·4 | 22·7 | 24·4 | 92·9 | 16·5 |
| புரட்டாதி 1961†† .. | 23·0 | 26·0 | 39·8 | 45·0 | 25·6 | 29·0 | 88·4 | 15·8 |
| **(இ) விவசாயம்** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 2·6 | 25·0 | 4·8 | 46·2 | 3·0 | 28·8 | 10·4 | 1·9 |
| பங்குனி 1961 .. | 2·3 | 23·2 | 4·9 | 49·5 | 2·8 | 28·3 | 9·9 | 1·8 |
| புரட்டாதி 1961†† .. | 3·5 | 32·4 | 3·7 | 34·3 | 3·6 | 33·3 | 10·8 | 1·9 |
| **(ஈ) கைத்தொழில்** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 2·2 | 10·9 | 8·3 | 41·3 | 9·5 | 47·3 | 20·1 | 3·6 |
| பங்குனி 1961 .. | 2·2 | 8·7 | 10·1 | 39·8 | 13·1 | 51·6 | 25·4 | 4·5 |
| புரட்டாதி 1961†† .. | 2·9 | 10·1 | 14·5 | 50·5 | 11·3 | 39·4 | 28·7 | 5·1 |
| **(உ) நுகர்ச்சி** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 10·5 | 29·9 | 14·8 | 42·2 | 9·8 | 27·9 | 35·1 | 6·3 |
| பங்குனி 1961 .. | 8·6 | 26·5 | 15·1 | 46·6 | 8·7 | 26·9 | 32·4 | 5·8 |
| புரட்டாதி 1961†† .. | 8·1 | 26·8 | 13·4 | 44·4 | 8·7 | 28·8 | 30·2 | 5·4 |
| **(ஊ) ஏனைய கடன்கள்** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 1·3 | 15·1 | 5·2 | 60·5 | 2·1 | 24·4 | 8·6 | 1·5 |
| பங்குனி 1961 .. | 2·0 | 19·6 | 5·4 | 52·9 | 2·8 | 27·4 | 10·2 | 1·8 |
| புரட்டாதி 1961†† .. | 0·9 | 11·5 | 4·5 | 57·7 | 2·4 | 30·8 | 7·8 | 1·4 |
| **மொத்தம்** | | | | | | | | |
| புரட்டாதி 1960 .. | 235·2 | 41·9 | 239·3 | 42·7 | 86·3 | 15·4 | 560·9 | 100·0 |
| பங்குனி 1961 .. | 229·3 | 40·7 | 248·3 | 44·1 | 85·4 | 15·2 | 562·9 | 100·0 |
| புரட்டாதி 1961†† .. | 181·4 | 32·5 | 285·9 | 51·2 | 91·3 | 16·3 | 558·6 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி

† முற்பணங்கள் என்பதில் மேலதிகப்பற்றுகள், கடன்கள், கழிவுபட்ட உண்டியல்கள் முதலியவை அடங்கும்.

†† தற்காலிகமானவை.

1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதி முடிவுற்ற காலத்தில் மொத்த முற்பணங்கள் 5609 இலட்சம் ரூபாய்களிலிருந்து வீழ்ச்சியடைந்து 5586 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இம்மொத்தத் தொகையின் கூறுகளில் ஒன்றாகிய நிதியீட்டத் தேவைகளுக்கான முற்பணங்களின் பேரிலேயே ஆகக்கூடிய வீழ்ச்சி ஏற்பட்டது. நிதியீட்டத் தேவைகளுக்கான முற்பணங்கள் 1016 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு புரட்டாதி மாதம் 884 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்தன. நுகர்ச்சிக்கான முற்பணங்கள் 351 இலட்சம் ரூபாய்களிலிருந்து 302 இலட்சம் ரூபாய்களுக்கும், ஏனைய முற்பணங்கள் 86 இலட்சம் ரூபாய்களிலிருந்து 78 இலட்சம் ரூபாய்களுக்கும் குறைந்தன. மேற்கூறியவற்றிற்கு எதிர்மாறான முறையில், வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 3851 இலட்சத்திலிருந்து ரூபா 3927 இலட்சத்திற்கும், விவ்சாயத் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 104 இலட்சத்திலிருந்து ரூபா 108 இலட்சத்திற்கும் அதிகரித்

தன. கைத்தொழிற் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 201 இலட்சத்திலிருந்து ரூபா 86 இலட்சத்தால் குறிப்பிடும்படியாக அதிகரித்து ரூபா 287 இலட்சத்தை அடைந்தன. நிதித் தேவைகளுக்கான கொடுகடன்கள் பொதுவாக வாடகைக் கொள்வனவுக் கூட்டுநிலையங்களுக்கும், ஏனைய நிலையங்களுக்கும் வழங்கப்பட்ட முற்பணங்களைக் குறிப்பனவாகும். அவை பலதரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை நிதியீட்டுவதற்காக உள்ளன. அவை பெரும்பாலும், புதிய அல்லது பாவித்த மோட்டார் வாகனங்கள், நிலையான நுகர்ச்சிப் பொருட்கள் முதலியன வற்றைக் கொள்வனவு செய்வதற்காகவும், ஏனைய அத்தியாவசியமான இழு பொறிகள், இயந்திரங்கள், முதலிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் உள்ளன. நுகர்ச்சிக்கான முற்பணங்கள் பெரும்பாலும் வர்த்தக வங்கிகள் தத்தமது பற்று வரவுக்காரர்களுக்கு நேரடியாக வழங்கிய கடன்களாகும். இவை நெடுங்காலம் பாவிக்கக்கூடிய நுகர்ச்சிப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், பலதரப்பட்ட பொறுப்புக்களை நீக்குவதற்கான நிதியுதவியாகவும், சொந்த விடயத்திற்கான கடன்களாகவும் வளங்கப்பட்டவையாகும். நிதித் தேவைகளுக்காகவும், நுகர்ச்சித் தேவைகளுக்காகவும் வளங்கப்பட்ட முற்பணங்களின் தொகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் வாடகைக் கொள்வனவு ஏனைய அத்தியாவசியமில்லாத் தேவைகள் முதலியனவற்றிற்காகக் கிடைக்கும் கொடுகடன்களின்மேல் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளின் பயனாய் ஏற்பட்டதாகும். வர்த்தகத் தேவைகளுக்காக வளங்கப்பட்ட முற்பணங்களின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பு, ஏற்றுமதி வியாபாரங்களுக்கு வளங்கப்பட்ட கொடுகடனின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உண்டானது ஆகும். விவசாயம், கைத்தொழில் ஆகிய தேவைகளுக்கான முற்பணங்களின் அதிகரிப்பு, வர்த்தக வங்கிகள் தமது பொருள்வளங்களிற் கொஞ்சம் உயர்ந்த விகிதாச்சாரமான பங்கை இத்தேவைகளுக்காக தற்பொழுது விநியோகிக்கின்றன என்பதைக் காட்டுகின்றது.

தனிப்பட்டோர் துறைக்கு வழங்கப்பட்ட மொத்த வங்கி முற்பணங்களில் 70.3 சதவீதமானவை வர்த்தகத் தேவைகளுக்கும் (அதாவது பெரும்பாலும் விவசாயப் பொருட்களின் நடமாட்டத்தின் நிதியீட்டங்களுக்கும்) 15.8 சதவீதமானவை நிதித் தேவைகளுக்கும், 1.9 சதவீதமானவை கமத்தொழிற் தலங்களுக்கு நேரடியாக நிதியீட்டவும், 5.4 சதவீதமானவை நுகர்ச்சித் தேவைகளுக்கும் உபயோகிக்கப்பட்டன. ''ஏனைய'' முற்பணங்கள், மொத்தத்தின் 1.4 சதவீதமாக விளங்கின. இவ்வெண்தொகைகள், தனிப்பட்டோர் துறையில் உள்ள கமத்தொழில், கைத்தொழில் ஆகிய தொழிற்பாடுகளுக்கு வங்கிகள் நேரடியாகச் செய்யும் நிதியீட்டங்களின் முழுமையான அளவு மிகக் குறைந்த மட்டத்திலேயே தொடர்ந்தும் இருக்கையில், வங்கித் தொழிலின் பொருள்வளங்களிற் பெரும்படியானவை ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்களுக்குக் கொடுகடன் வழங்க உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகின்றன.

பின்வரும் அட்டவணை, அரையாண்டு அளவீட்டின் அடிப்படையில் முற்பணங்களை அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்திக் காட்டுகின்றது.

**அட்டவணை II—38**

அடமானங்களின்வகைப்படி பாகுபடுத்தப்பட்டட முற்பணங்கள்

| அடமானத்தின் வகை | 1960 புரட்டாதி 30 | | 1961 பங்குனி 31 | | 1961 புரட்டாதி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக |
| உண்டியல்கள் .. .. | 130.8 | 23·3 | 143·2 | 25·4 | 148·5 | 26·6 |
| அரசாங்கப் பிணைகள் .. .. | 11·8 | 2·1 | 14·0 | 2·5 | 11·6 | 2·1 |
| கூட்டுநிலையங்களில் பங்கு முதல் .. | 31·2 | 5·6 | 32·0 | 5·7 | 28·8 | 5·2 |
| தவணை, சேமிப்பு, ஆகிய வைப்புக்களும் ஏனைய பண வைப்புக்களும் (ஆயுட் காப்புறுதிகளின் பணப் பெறுமானம் உட்பட) | 16·0 | 2·9 | 18·4 | 3·3 | 20·4 | 3·7 |
| வியாபார இருப்புகள் .. .. | 185·6 | 33·1 | 172·8 | 30·7 | 169·9 | 30·4 |
| அசைவற்ற சொத்து .. .. | 54·1 | 9·6 | 54·8 | 9·7 | 48·5 | 8·7 |
| ஏனையவை .. .. | 88·4 | 15·8 | 72·3 | 12·8 | 62·0 | 11·1 |
| பிணை அற்றவை .. .. | 43·0 | 7·7 | 55·3 | 9·8 | 68·9 | 12·3 |
| மொத்தம் .. .. | 560·9 | 100·0 | 562·9 | 100·0 | 558·6 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி

1960ம் ஆண்டு புரட்டாதிக்கும் 1961ம் ஆண்டு புரட்டாதிக்கும் இடையில் வளங்கப்பட்ட முற்பணங்களை அடமானங்களின் வகைப்படி பாகுபடுத்தி அதற்கு முந்தைய ஒப்பியல்பான காலத்துடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, பிணையற்ற முற்பணங்கள் அல்லாத ஏனைய சகலவகையான முற்பணங்களினதும் அமைப்பிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. பிணையற்ற முற்பணங்களின் பங்கு 7.7 சதவீதத்திலிருந்து 12.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. தவணை, சேமிப்பு ஆகிய வைப்புக்களையும் ஏனைய பணவைப்புக்களையும் அடமானமாகக் கொண்ட முற்பணங்களின் பங்கு 2.9 சதவீதத்திலிருத்து 3.7 சதவீதத்திற்கு சிறிய அளவான 0.8 சதவீதத்தால் அதிகரித்திருக்க, உண்டியல்களுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் 23.3 சதவீதத்திலிருந்து 26.6 சதவீதத்திற்கு 3.3 சதவீதத்தால் உயர்ந்தது. ''ஏனைய'' வகையான நோட்டுகளுக்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்களின் பங்கு 15.8 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கு 4.7 சதவீதத்தால் வீழ்ந்தமை, பெரும்பாலும் வாடகைக் கொள்வனவு நோட்டுகளுக்கெதிராக வழங்கப்பட்ட வங்கி முற்பணங்களின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

முற்பணங்களை வட்டி விகிதங்களின்படி பாகுபடுத்திப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை II—39**

**வட்டிவீதங்களின்படியுள்ள முற்பணங்கள்***

| வட்டிவிகிதம் % | 1960 புரட்டாதி 30 | | 1961 பங்குனி 31 | | 1961 புரட்டாதி 30 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக | தொகை பத்து இலட்சம் ரூபா | மொத்தத்தின் சதவீதமாக |
| 2½ க்குக்கீழ் .. .. .. | 3·1 | 0·6 | 3·2 | 0·7 | 3·0 | 0·6 |
| 2½ .. .. .. | ... | ... | ... | ... | ... | ... |
| 3 .. .. .. | 10·9 | 2·2 | 4·0 | 0·8 | 1·8 | 0·4 |
| 3½ .. .. .. | 11·4 | 2·3 | 6·9 | 1·4 | 11·0 | 2·3 |
| 4 .. .. .. | 7·9 | 1·6 | 9·5 | 1·9 | 8·4 | 1·7 |
| 4½ .. .. .. | 148·6 | 30·0 | 26·6 | 5·4 | 1[illegible]·5 | 3·4 |
| 5 .. .. .. | 47·3 | 9·6 | 26·5 | 5·4 | 19·7 | 4·1 |
| 5½ .. .. .. | 24·1 | 4·9 | 23·7 | 4·9 | 6·1 | 1·3 |
| 6 .. .. .. | 133·1 | 26·9 | 255·4 | 52·3 | 244·7 | 50·8 |
| 6½ .. .. .. | 37·2 | 7·5 | 44·1 | 9·0 | 33·9 | 7·0 |
| 7 .. .. .. | 60·2 | 12·2 | 76·6 | 15.7 | 86·5 | 18·0 |
| 7½ .. .. .. | 6·8 | 1·4 | 5·0 | 1·0 | 41·7 | 8·7 |
| 8 உம் அதற்கு மேலும் .. | 4·2 | 0.8 | 7·0 | 1·4 | 8.3 | 1·8 |
| மொத்தம் .. .. | 494·8 | 100·0 | 488·5 | 100·0 | 481·8 | 100·0 |

* *நடைமுறைச் செலாவணி மாற்றுவிகிதங்களின்படி கொள்வனவு செய்யப்பட்ட இறக்குமதி உண்டியல்கள் நீக்கி.*

வர்த்தக வங்கிகள் கடன்கொடுக்கும் வட்டி வீதங்களின் உத்தியோக பூர்வமான மாற்றங்கள் எதுவும் ஏற்படாதிருந்தபொழுதிலும், முந்தைய ஆண்டில் உயர்ச்சியடைந்த மகாவங்கியின் வட்டிவிகிதத்திற்கும் சந்தை வட்டி வீதங்களுக்கும் இணக்கமளிக்கும் முறையில் வர்த்தக வங்கிகள் முழுமையில் தமது கடன் கொடுத்தற் கொள்கைகளை மாற்றிக் கொண்டன என்பதை மேலேயுள்ள அட்டவணை காட்டுகிறது. 1960ம் ஆண்டு புரட்டாதி மாத முடிவில் நின்ற மொத்த முற்பணங்களில் ஏறக்குறைய 30 சதவீதமானவை 4½ சதவீத வட்டிக்கு வழங்கப்பட்டிருக்கையில், 1961ம் ஆண்டு புரட்டாதியில் ஆக 3.4 சதவீதமான முற்பணங்கள் மாத்திரம்தான் இந்த வீதவட்டிக்கு வழங்கப்பட்டது. இதற்கு மாறாக 1961ம் ஆண்டு புரட்டாதிமாத முடிவில் நின்ற முற்பணங்களில் 50.8 சதவீதமானவை 6 சதவீத வட்டிக்கு வழங்கப்பட்டிருந்தமை, 1960ம் ஆண்டு புரட்டாதிக்குரிய 26.9 சதவீதத்துடன் ஒப்பிடலாம். வங்கி முற்பனங்களின் மொத்தத் தொகையிற் கிட்டத்தட்ட 86 சதவீதமானவை 6 சதவீத வட்டிக்கும் அதற்கு மேலான வட்டிவீதங்களுக்கும் வளங்கப்பட்டிருந்தது என்பது 1960ம் ஆண்டு புரட்டாதி மாதத்திற்குரிய 49 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கதாகும். வங்கித்

தீர்ப்பணவுகளின் மாதச் சராசரி 1960ம் ஆண்டுக்குரிய 7430 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா 7428 இலட்சத்திற்கு சிறிது மாற்றமடைந்தது. முன்னர் கூறப்பட்டபடி, சேமிப்புவைப்புக்கள் தவிர்ந்த ஏனைய வைப்புக்களுக்கு வர்த்தக வங்கிகளின் வட்டிவீதங்கள் இவ்வாண்டு முழுவதும் மாற்றமின்றி நிலவின. இறைசேரி உண்டியல்களின் வட்டிவிகிதம் 1961ம் ஆண்டு மாசி மாதம் 2.64 வீதத்திலிருந்து 0.04 சதவீதத்தால் அதிகரித்து 2.68 சதவீதமாக விளங்கியது. இவ்விகிதம் எஞ்சிய மாதங்களில் எவ்வித மாற்றமும் அடையாது ஆண்டு முழுவதும் நிலைத்து நின்றது.

ஏனைய நிதிநிலையங்கள்

வர்த்தக வங்கிகள், இலங்கைச் சேமிப்புவங்கி, தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, சேமநிதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் நிலுவையில் இருந்த சேமிப்பு வைப்புக்கள் 164 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது என்பது 1960ம் ஆண்டில் ஏற்பட்ட 786 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கதாகும். சேமிப்புகளின் மொத்த அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி, தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கிகள் ஆகியவற்றில் உள்ள வைப்புக்களிலேயே காணப்பட்டது. ஆனால் நிலுவையில் உள்ள சேமநிதிப் பத்திரங்களின் பெறுமானம் சிறிது அதிகரித்தது. 1960ம் ஆண்டு 23 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்த இலங்கைச் சேமிப்பு வங்கியிலுள்ள வைப்புக்கள் 1961ம் ஆண்டில் 18 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தன. தபாற்கந்தோர் சேமிப்பு வங்கியிலுள்ள வைப்புக்கள் 1960ம் ஆண்டு 225 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்ததற்கு எதிராக 1961ம் ஆண்டில் 31 இலட்சம் ரூபாய்களால் வீழ்ந்தன. சேமிப்புவைப்புக்களில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சி, கேள்விவைப்புகளும் குறிப்பிடும் படியாக வீழ்ச்சியடைந்த ஒரு நேரத்தில் ஏற்பட்டுள்ளது. சேமிப்பு வைப்புக்களின் வீழ்ச்சிக்கு ஒருவகையான காரணம், இவ்வருடத்தில் ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சியுற்றமையால் ஏற்றுமதித் துறையிலுள்ள தொழிற்பாடுகள் குறைவுற்றதைத் தொடர்ந்து பொது வருமானங்களும் வீழ்ச்சியடைந்தமையே ஆகும்.

அட்டவணை II—40

சேமிப்பு வைப்புக்களும் சேமநிதிப் பத்திரங்களும்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960ம் ஆண்டு முடிவில் | 1961ம் ஆண்டு முடிவில்* | மாற்றம் |
|---|---|---|---|
| தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி .. .. .. | 343·4 | 340·3* | — 3·1* |
| இலங்கைச் சேமிப்பு வங்கி .. .. .. | 75·5 | 73·7* | — 1·8* |
| வர்த்தக வங்கிகள் (தவணை வைப்புகளும் சேமிப்பு வைப்புகளும்) .. .. .. | 372·2 | 360·2† | —12·0† |
| சேமநிதிப்பத்திரங்கள் (நிலுவையில் உள்ளவை) .. | 32·2 | 32·7* | + 0·5* |
| மொத்தம் .. .. .. .. | 823.3 | 806·9* | —16·4* |

மூலம்: இலங்கை மகா வங்கி

* தற்காலிகமானவை.

† கார்த்திகை முடிவில்.

ஊழியர் சேமநிதியினுற் திரட்டப்பட்ட நிதி 1960ம் ஆண்டில் உயர்ச்சியடைந்த அளவிலும் பார்க்க 1961ம் ஆண்டிற் சிறிய அளவால் உயர்ந்தது. இந்நிதியின் வரவுகள் 558 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டு 12 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது, 570 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது. 1960ம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கின் 1961ம் ஆண்டில் உண்டான சிறிய அளவான அதிகரிப்புக்கு உள்ள காரணம், இவ்வருடத்தில் இச்சேமநிதியின் கீழ் கொண்டு

வரப்பட்ட புதிய தொழில்கள் மிகச் சில என்பதேயாகும். அன்றியும் 1960ம் ஆண்டில் ஏற்கனவே நாட்டிலுள்ள தொழில்களில் அனேகமானவையை இந்நிதியின் கீழ்ச் சேர்த்தாயிற்று.

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினது மொத்தக் கடன்கள், ஒப்புரவு முதலீடுகள் ஆகிய நிலுவைகள் 1960ம் ஆண்டில் இருந்த 180 இலட்சம் ரூபாய்களிலிருந்து 30 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, 1961ம் ஆண்டு மார்கழியில் 210 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இந்நிதியீட்டங்களிற் பெரும்பகுதியானவை கடன்படுவோருக்கு நேரடியாக வழங்கப்பட்ட கடன்களாகும். அபிவிருத்தித் திட்டங்களில் ஒப்புரவு முதலீடுகளாக 1961ம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகை ரூபா 3 இலட்சமாகும். கமத்தொழில் கைத்தொழிற் கடனுதவி கூட்டுத்தாபனம் வழங்கிய கடன்கள் 1961ம் ஆண்டு தை மாதத்திற் சிறிது அதிகரித்து பின்உள்ள காலங்களில் வீழ்ச்சிப் போக்கை காட்டியது. இக்கூட்டுத்தாபனத்தின் கடன்நிலுவைகள் 1960ம் ஆண்டு மார்கழியில் இருந்த 317 இலட்சம் ரூபாய்களுக்கு எதிராக 1961ம் ஆண்டு கார்த்திகை முடிவில் 307 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1961ம் ஆண்டு தைமாதத்திற்கும் ஆனிமாதத்திற்கும் இடையில் மொத்தக் கடன்கள் 4 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தன என்பது 1960ம் ஆண்டு இதேகாலத்தில் ஏற்பட்ட 2 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. இக்கூட்டுத்தாபனம் கடன் கொடுப்பதற்கு அதன் பொருள் வளங்களில் நிகர அதிகரிப்பு ஏற்படாமையினுல் இவ்வருடத்தில் வழங்கப்பட்ட புதிய கடன்கள் அனைத்தும் திருப்பிப்பெறப்பட்ட மூலதனத்திலிருந்தே வழங்கப்பட்டன. இக்கூட்டுத்தாபனம் வழங்கிய புதியகடன்களின் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உள்ள காரணங்களுள் ஒன்று யாதெனில், பொருட்களின் விலைவாசிகள் குறைவுற்றதையும், கொடுகடன் வசதிகளின்மேல் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டதையும், தொடர்ந்து ஏற்கனவே உள்ள கடன்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டிய காலவரைகள் நீடிக்கப்பட்டதேயாகும். திருப்பிக் கொடுக்கப்படவேண்டிய காலங்கள் நீடிக்கப்பட்டமையால் புதிய கடன்கள் வழங்குவதற்கு உபயோகிக்கப்படும் திருப்பிப் பெறப்பட்ட முதல் பெரும் அளவாற் குறைந்தன. இக்கூட்டுத்தாபனம் வழங்கிய கொடுகடன்களின் அளவு குறைந்தமைக்கு உள்ள வேருெரு காரணம், கடன் கொடுத்தல் சம்பந்தமாகக் கட்டுமட்டான கொள்கைகள் கையாளப்பட்டு எத்தேவைகளுக்காகக் கடன் கோரப்பட்டது என மிகக் கூர்மையான பரிசீலனைகள் செய்யப்பட்டதுமேயாகும். கைத்தொழில் கமத்தொழில் அபிவிருத்திகளுக்கு நேரடியாகத் தேவைப்படாத கடன்களை மிக்க கூர்மையாகப் பரிசீலனை செய்யும் கொள்கையை இக்கூட்டுத்தாபனம் புகுத்தியது. இதன் விளைவாக, சொத்துக்களை ஒருவரிடமிருந்து இன்னெருவருக்கு மாற்றுவதற்காகவோ விற்பனை செய்வதற்காகவோ இக்கூட்டுத்தாபனத்திடமிருந்து வழக்கமாகக் கோரப்படும் நிதியுதவி சப்பந்தமான கோரிக்கைகள் குறைந்தன.

தேசிய ஈட்டு வங்கியின் கடன் நிலுவைகள் 1959/60ம் ஆண்டில் இறுதியில் இருந்த 561 இலட்சம் ரூபாய்களிலிருந்து 9 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து 1960/61ம் ஆண்டின் இறுதியில் 570 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இவ்வங்கி வழங்கிய தனது புதிய கடன்களை, திருப்பிப்பெறப்பட்ட முதல்களிலிருந்து மட்டுமின்றி, தான் வெளியிட்ட கடன்முறிகளிலிருந்தும் நிதியீட்ட முடிந்தது. இவ்வருடத்தில் இவ்வங்கி 4½ சதவீத வட்டியில் 50 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கடன்முறிகளை வெளியிட்டது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தனது தொழிலை 1962ம் ஆண்டு தைமாதம் 1ம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கான முன்கூட்டிய ஆயத்தங்களை 1961ம் ஆண்டு செய்தது. தற்பொழுது இக்கூட்டுத்தாபனம்தான் இந்நாட்டி

லுள்ள புதிய ஆயுட்காப்புறுதித் தொழிலை நடத்துவதற்கு ஏகஉரிமை உடைய தென்பதோடு, ஏனைய வகையான சகல காப்புறுதித் தொழில்களையும் மேற் கொள்ளத்தக்கது. ''இலங்கையிலுள்ள காப்புறுதித் தொழில்களை கட்டுப்படுத் துவதற்கான அதிகாரச் சட்டம்'' என்ற தலையங்கமுடைய சட்டம், நாட்டி லுள்ள ஆயுட்காப்புறுதி, பொதுக்காப்புறுதி ஆகிய தொழிற்களிற் தற்பொழுது ஈடுபட்டிருக்கும் காப்புறுதிக் கூட்டு நிலையங்களின் தொழிற்பாடுகளைச் சீர்படுத் தும் நோக்கத்தோடு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.

மக்கள் வங்கியை நிறுவுவதற்கான ஒரு மசோதா 1961ம் ஆண்டு வைகாசி மாதம் 1ம் திகதி சட்டமாயிற்று. இந்த வங்கி 1961ம் ஆண்டு ஆனி மாதம் 1ம் திகதி தொழிற்பட ஆரம்பித்தது. மக்கள் வங்கி, கூட்டுறவு இணைப்பு வங்கிக் குப் பதிலாக உள்ளது. ஆனால் அது கூட்டுறவு வங்கியிலும் பார்க்க பரந்த வாய்ப்பும் விவகாரங்களும் உடையது ஆகும். இவ்வங்கி, இலங்கை வங்கி நடாத் தும் வர்த்தக வங்கித் தொழில்களைப் போன்ற தொழில்களை மேற்கொள்ளுவ தற்கும், கிராமத் துறைகளிலும் ஏனைய துறைகளிலும் உள்ள விவசாயம், கைத் தொழில் ஆகியவற்றிற்கு குறுகியகால, நடுத்தரகால, நீண்டகாலக் கொடுகடன்களை வழங்குவதுபோன்ற பரந்த புதிய விவகாரங்களை மேற்கொள்ளுவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள், அனுமதி பெற்ற சங்கங்கள், பயிர் செய்கைச் சங்கங்கள், ஏனைய தனி ஆட்கள் ஆகியோருக்கு நிதி உதவியும் ஏனைய உதவிகளும் அளித்து இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தையும், கிராமத் துறையின் வங்கிப் பழக்கங்களையும், விவசாயக் கொடுகடன் வசதிகளையும் அபி விருத்தி செய்வதே இவ்வங்கியின் நோக்கம் என 1961ம் ஆண்டின் 29ம் இலக்க மக்கள் வங்கிச் சட்டம் தெரிவிக்கிறது.

நிதி அமைச்சரின் வரவு செலவு திட்டப் பேச்சில் இலங்கை வங்கியைத் தேசியமயமாக்கும் உபாயமும் அடங்கியுள்ளது. 1939ம் ஆண்டில் அவ்வங்கி நிறு வப்பட்ட காலம் தொடக்கம் அதில் ஒரு பகுதி, பங்குமுதல் உடைய தனிப் பட்டோருக்கும், ஒருபகுதி அரசாங்கத்திற்கும் உரித்தாக இருந்தது. அவ்வங்கி தேசியமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்களின் உடமைகளாக இருந்த பங்கு முதல்களை அரசாங்கம் கொள்வனவு செய்யும். அதன்பின் அவ்வங்கியினது சகல பங்கு முதலும் அரசாங்கத்தினது உடமையாகும். தேசியமயமாக்கப்பட முன்பு, இவ்வங்கியின் இயக்குநர்கள் சபையில் இறைசேரியின் காரியதரிசியுடன் இன்னும் இருவர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களாகவும், மற்ற இரண்டு இயக்குநரும் பங்காளிகளால் தெரிவு செய்யப்பட்டவர்களாகவும் இருந்தது. தேசியமயமாக்கப்பட்டபின்னர் சகல இயக்குநர்களும் அரசாங்கத்தினாலேயே நிய மிக்கப்படுகின்றனர்.